**கன்னியாகுமரி மாவட்டம்** **மணவாளக்குறிச்சி பேரூராட்சி**

ந. க. எண். 107/2010 நாள் : 9-06-2010

## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010 – 2011
## ஒப்புநோக்கு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

1. கன்னியாகுமரி மாவட்டம் மணவாளக்குறிச்சி பேரூராட்சியில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010 – 2011 –ன் கீழ் பணிகளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்ட பணிகளுக்கு மணவாளக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரால் பகிரங்கமாக பெற்றுக்கொள்ள வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தக்காரர்கள் மத்திய அல்லது மாநில அரசு அல்லது மத்திய அரசு மாநில அரசு சார்ந்த நிறுவனங்களிலிருந்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். மேலும் ஒப்பந்தக்காரர்கள் குறைந்த பட்ச தகுதியுடைய வகுப்பு 3 மற்றும் 4ல் தெரிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டும் பணிகள் வழங்கப்படும். (15 லட்சம் முதல் 30 லட்சம் மதிப்பீடு வேலைகளுக்கு வகுப்பு 3 வது நிலையும், 15 லட்சம் வரையுள்ள வேலைகளுக்கு வகுப்பு 4வது நிலை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தங்கள் பெறப்படும்)

2. பணிகளுக்குரிய ஒப்பந்தப் படிவங்களை **24–06–2010ம் தேதி மாலை 3.00** மணி வரை அலுவலக நேரத்தில் உரிய தொகையினை மணவாளக்குறிச்சி பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி அல்லது செயல் அலுவலர் மணவாளக்குறிச்சி பேரூராட்சி என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் படிவங்களை பதிவு தபால் மூலமாகவோ அல்லது விரைவு தபால் மூலமாகவோ பெற விரும்புவோர் உரிய தொகைக்கு மேல் கூடுதலாக ரூ. 200/– செலுத்த வேண்டும். தபால் வழி தாமதங்களுக்கு மணவாளக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் பொறுப்பேற்க இயலாது.

3. ஒவ்வொரு பணிகளுக்கும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ள டேவணித் தொகையை ரொக்கமாகவோ அல்லது வரைவோலையாகவோ செயல் அலுவலர், மணவாளக்குறிச்சி பேரூராட்சி என்ற முகவரிக்கு செலுத்தப்பட வேண்டும்.

4. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மணவாளக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ **25-06-2010 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00** மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட **இரண்டு உறை முறை,** ஒப்பந்தப்புள்ளி முறையில் உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி சமர்ப்பிக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மணவாளக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் **அன்றைய தினம் பிற்பகல் 3.30** மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினம் திறக்கப்படும்.

5. இதர விவரங்கள் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரடியாக கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (லட்சத்தில்) | டேவணித் தொகை (ரூ) | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை (ரூ) | பணி முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | பேரூராட்சி அலுவலகம் புதியதாக கட்டுதல் | **20.00** | 40000 | 6240 | 3 மாதம் |
| 2. | மணவாளக்குறிச்சி முஸ்லீம் பள்ளி முதல் ஆறான்விளை வரை சிமெண்ட் தளம் அமைத்தல் | **5.00** | 10000 | 1560 | 3 மாதம் |
| 3. | புதுக்குளம் தூர்வாரி பக்கசுவர் அமைத்து படிக்கட்டு கட்டுதல் | **5.00** | 10000 | 1560 | 3 மாதம் |
| 4. | அனைத்து வார்டுகளுக்கும் 125 எண்ணம் CFL தெருவிளக்கு போடுதல் | **5.00** | 10000 | 1560 | 3 மாதம் |
| 5. | சேரமங்கலம் வாய்க்கால் பாலம் முதல் ஐயப்பன் வீடு வரை பக்கச்சுவர் கட்டி கருந்தளம் அமைத்தல் | **10.00** | 20000 | 3120 | 3 மாதம் |

## நிபந்தனைகள்

1. ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளிகள் கொடுக்க வேண்டும்.
2. ஒப்பந்தக்காரர் இரண்டு உறையில் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்க வேண்டும்.
3. மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் (உறை 1 மற்றும் 2) ஒப்பந்தக்காரரின் முழு அஞ்சல் முகவரி தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். உறை 1 மற்றும் உறை 2 ஐயும் மேல் உறையிட்டு (Outer cover) ஒட்டி மூடி முத்திரையிட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு உறையின் (கவரின்) மீதும் எந்த வேலைக்கு என்பதை தெளிவாக எழுதி செயல் அலுவலர், மணவாளக்குறிச்சி தேர்வுநிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம் என பெறுநர் முகவரியும், அனுப்புநர் முகவரியும் தெளிவாக எழுதப்பட வேண்டும்.
4. டேவணித் தொகைக்கான செலுத்துச்சீட்டு/ வங்கி வரைவோலை, முன் அனுபவச்சான்றிதழ், ஒப்பந்தக்காரர் வகுப்புத் தகுதிச் சான்றிதழ், (தகுதி குறைந்த ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கத் தகுதியற்றவர் ஆவர். நிதிநிலைமை, விற்பனை/ வருமான வரிச்சான்றிதழ் போன்ற விபரங்களை ஒரு உறையில் (உறை 1) வைத்து உறையின் வெளிப்புறத்தில் “Technical Bid” என்று குறிப்பிட வேண்டும். மற்றொரு உறையில் (உறை 2) பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்படிவம் வைத்து அவ்வுறையின் வெளிப்புறத்தில் “price Bid” என்று குறிப்பிடப்பட வேண்டும்.
5. இதில் முதலில் “Technical Bid” என்று குறிப்பிட்டுள்ள உறை (உறை1) பிரிக்கப்பட்டு, அதில் வைக்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாட்டின்படி தகுதியாக இருந்தால் மட்டுமே “price Bid” என்று குறிப்பிட்டிருக்கும் இரண்டாவது உறை (உறை2) திறக்கப்படும். அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாட்டின்படி தகுதியானதாக இல்லையெனில் “price Bid” உறை திறக்கப்பட மாட்டாது.
6. ஒப்பந்தக்காரர்களே சிமெண்ட் மற்றும் தார் (80/100 Grade மற்றும் Emulsion) வாங்கிக் கொள்ள வேண்டும். இதன் பொருட்டு, வேலைகள் பாதிக்கப்படக்கூடாது. இதற்கு சம்மதம் அளிக்கும் நபர்கள் மட்டுமே டென்டர் கொடுக்க வேண்டும். சிமெண்ட் மற்றும் தார்க்கு தரச்சான்று, வேலை முடித்ததற்கான பட்டியலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
7. கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருட்கள் செயல் அலுவலர் அல்லது பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால், ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன், பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்றுப்பொருட்களை

வேலை நடக்கும் இடத்தில் ஒப்பந்தக்காரர் சேகரித்தல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள், பேரூராட்சிப் பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்.

8. யாருடைய டென்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித்தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படும்.

## சிறப்பு நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளிகள் கொடுப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் பெயரில் கட்டாயமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசு துறையில் ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு இரண்டரை மடங்கு அளவிற்கு கூடுதலாக கட்டுமான பொறியியல் பணிகள் செய்திருக்கப்பட வேண்டும்.
2. மேற்கண்ட பணிகளுக்கு தேவைப்படும் அனைத்து பொருள்களையும் ஒப்பந்தக்காரர்கள் தங்களது சொந்த பொறுப்பில் தரமானதாக வாங்கி பயன்படுத்தல் வேண்டும். அவ்வாறு வாங்கப்படும் பொருட்கள் தரம் மற்றும் அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். தரத்தைக் குறித்த தேவையான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. ஒப்பந்தக்காரர்கள் கடந்த 5 ஆண்டுகளில் செய்து முடித்த பணி விவரங்களை ஆண்டு வாரியாக தாக்கல் செய்வதோடு ஏற்கனவே பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்படாமல் உள்ள விவரங்களை தாக்கல் செய்யப்பட வேண்டும்.
4. அமைக்கப்படும் பணிகள் ஒப்பந்தக்காரர்கள் பணியினை முடிக்கும் நாளிலிருந்து ஒரு வருடம் முடியும் வரையில் ஏற்படும் அனைத்து பராமரிப்பு பணிகளையும் தன் சொந்த செலவிலேயே மேற்கொள்ளுதல் வேண்டும். கூடுதல் வைப்புத் தொகை மேற்படி மதிப்பீட்டில் 5% செலுத்தப்பட வேண்டும்.
5. இதர விவரங்களை ஒப்பந்தப்புள்ளி நமுனாவிலிருந்து தெரிந்து கொள்ளலாம் அல்லது அலுவலக நேரங்களில் பேரூராட்சி பொறியாளரின் ஆலோசனைகளைப் பெறலாம்.
6. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு மன்ற ஒப்புதல் பெற்ற பின்னரே வேலை உத்தரவு ஆணை வழங்கப்படும்.
7. மேற்கண்ட பணிகள் நடைபெறும் போது சம்மந்தப்பட்ட உயர் அலுவலர்களால் ஆய்வு செய்யப்படும்.
8. பணிகள் நிர்ணயிக்கப்பட்டகால அளவிற்குள் முடிக்கப்பட வேண்டும் தவறும் பட்சம் அபராத தொகை விதிக்கப்படும்.
9. வேலை நடைபெறும் இடங்களில், வேலைக்கான ஒப்பந்ததாரர் பெயர், மதிப்பீடு, வேலையின் பெயர், ஒப்பந்த காலம் மற்றும் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் போன்ற விவரங்களடங்கிய விளம்பரப்பலகை தவறாமல் வைக்கப்பட வேண்டும்.

**செயல் அலுவலர்**
**மணவாளக்குறிச்சி தேர்வு நிலை பேரூராட்சி**
**கன்னியாகுமரி மாவட்டம்**

**பெறுநர்:**

பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்,
மணவாளக்குறிச்சி தேர்வுநிலை பேரூராட்சி.

**நகல் :—**

1. மாவட்ட ஆட்சி த்தலைவர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பேரூராட்சிகள் உதவி இயக்குநர் நாகர்கோவில் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகள் பிரிவு, பேரூராட்சிகள், நாகர்கோவில்
4. இளநிலைப் பொறியாளர், திங்கள்நகர் தொகுப்பு
5. பேரூராட்சி செயல் அலுவலர்கள், குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பேரூராட்சிகள் (விளம்பரம் பலகையில் விளம்பரம் செய்ய)
6. அலுவலக விளம்பரப் பலகைக்கு.
7. சம்பந்தப்பட்ட கோப்புக்கு (6)
8. தலைவர் அவர்கள் மேஜைக்கு தகவலுக்காக.

குறிப்பு: 1) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் வெளியிடப்பட்ட பொறியாளர் கையேட்டில் குறிப்பிட்டுள்ள தகுதியுடைய ஒப்பந்தக்காரர்கள்.

2) மேலும்விபரங்களுக்கு http://www.tenders.tn.gov.in மற்றும் http://townpanchayats.tn.gov.in/tender இணையதளத்தில் பார்க்கலாம்.